உ

கணபதிதுணை.

# திருச்செந்தில்

# நிரோட்டகயமகவந்தாதி.

துறைமங்கலம்

## சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஆறுமுகநாவலரவர்கள்

செய்த உரையுடன்

## சுவாமிநாதபண்டிதரால்

தமது

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்:

கீலக௵ ஆனிமீ.

இதன் விலை அணா - ௧௨.

REGISTRAR OF BOOKS
23 DEC 1908
MADRAS

இப்புத்தகம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் கருத்தின்படி அவர்கள் பரம்பரையாளுக்கராகிய எம்மாற் றாபிக்கப்பட்ட, திருச்செந்தூர்ச் சுப்பிரமணியவித்தியா சாலையின்பொருட்டுப் பதிப்பிக்கப்பட்டது. பிறர் பதிப்பிக்கின் சட்டப்படி நட்டத்துக்காளாவார்கள்.

இங்ஙனம்,

சுவாமிநாதபண்டிதர்.

223174
சென்னை-600,008

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
23 DEC 1908
MADRAS.

உ

கணபதிதுணை.

# திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி

## மூலமும் உரையும்.

காப்பு.

கொற்றவருணைநின்றன்றுழக்கியகொக்குருவைச்
செற்றவருணையன்னசெவ்வேற்படைச்செந்திலர்க்கு
முற்றவருணையந்தாதியென்றுமுதிர்மதப்பேர்
பெற்றவருணையானனத்தாதியைப்பேசுவனே.

இதனது பதப்பொருள். அன்று கொற்ற வருணை நின்று உழக்கிய கொக்குருவைச் செற்ற-(யுத்தஞ்செய்த) அக் காலத்து வெற்றியையுடைய சமுத்திரராசனைக் (கடலிடத்தே) நின்று கலக்கிய மாமரவடிவாகிய சூரபத்மனைக் கொன் .— அருணை அன்ன செவ்வேற்படைச் செந்திலர்க்கு - சூரியனைப்போன்ற சிவந்த வேலாயுதத்தையுடைய திருச்செந்தூரில் வாழும் முருகக்கடவுளுக்கு,— வருணை அந்தாதிமுற்ற-(நான் பாடத்தொடங்கும்) வர்ணனையையுடைய இந்நிரோட்டகயமக வந்தாதியானது (இடையூறின்றியினிது) முடியும்பொருட்டு,— என்றும் முதிர் மதப்பேர் பெற்ற அருள் நனை - எக்காலத்தும் முதிர்ந்தமதநீரென்று (உலகத்தார் சொல்லும்)பெயரைப் படைத்த அருள்வெள்ளமானது தோன்றி நனைக்கப்பெற்ற,— ஆனனத்து ஆதியைப் பேசுவன்—யானைமுகத்தையுடைய கணபதியை (யான்) துதிப்பேன். என்றவாறு.

ஏ - ஈற்றசை. அந்தாதியானது முடியும்பொருட்டுக் கணபதியைத் துதிப்பேனெனக் கூட்டுக. நிரோட்டகயமகவந்தாதி - நிரோட்

டகமும் யமகமுமாகப் பாடப்படும் அந்தாதி. நிரோட்டகமாவது இதழ் முயற்சியாற்பிறக்கும் உயிரும் மெய்யும் உயிர்மெய்யும் வாராமற் பாடப்படுவது. யமகமாவது அடிமுதலெழுத்தோடு இரண்டெழுத்துமுதற் பத்தெழுத்திறுக ஓரடிபோல நான்கடியும் பாடப்படுவது. இப்பிரபந்தத்தின் முதலிலே தனித்து நிற்கும் இக்காப்புச்செய்யுள் நிரோட்டகமுமன்று, யமகமுமன்று, திருக்கெனக் கண்டுகொள்க. திருக்காவது அடிமுதலெழுத்தொழித்து இரண்டெழுத்துமுதற் பன்னிரண்டெழுத்திறுக ஓரடிபோல நான்கடியும் பாடப்படுவது.

யானைக்கண் டங்கரிசென் றேத்தெழிற்செந்திலின் றடை
யானைக்கண் டங்கரியற்கங்கயிலையையேத்ததகை [ந்தே
யானைக்கண் டங்கரிசேரெண்டிக்காக்கினற்கீநலிசை
யானைக்கண் டங்கரிதாகியசீர்க்கதி* யெய்தினனே.

இ - ள். யானைக்கண் தங்கு அரி சென்று ஏத்து எழிற் செந்தில் இன்று அடைந்து - வெள்ளையானையின்மேல் இருக்கின்ற இந்திரன் போய்த் துதிக்கும் அழகினையுடைய திருச்செந்தூரை இன்றைக்குச் சேர்ந்து,—யான் - நான்,—ஐக்கண்டம் கரியற்கு - அழகையுடைய கழுத்துக் கரிதாகப்பெற்றவரும்,—அம் கயிலையை ஏத்த தகை ஆன் ஐக்கு - அழகியகைலாசகிரியைப்போன்ற பெருமையையுடைய இடபத்தை வாகனமாகக்கொண்ட கடவுளும்,—அண்டம் கரி சேர் எண்டிக்கு ஆக்கினற்கு - அண்டங்களையும் அட்டகஜங்கள் பொருந்திய அட்டதிக்குக்களையும் சிருட்டித்தவருமாகிய பரமசிவனுக்கு,—ஈ நல் இசையானைக் கண்டு - (பிரணவப்பொருளை) உபதேசித்தருளிய நன்மையாகிய கீர்த்தியையுடைய சுப்பிரமணிய சுவாமியைத்

* அரிதாகியசீர்க்கதியெனச் சிறப்பித்தவசனற் பரமுத்தி எனக்கொள்க. என்னை? அரியவற்றுளெல்லாம் அரியதாயும் சிறந்தவற்றுளெல்லாஞ் சிறந்ததாயும் உள்ளததுவாகலான்.

தரிசித்து,—அங்கு அரிதாகிய சீர்க்கதி எய்தினன் - அவ்விடத்தே (யாவர்க்குங் கிடைத்தற்கு) அரிதாகிய சிறப்பையுடைய மோக்ஷத்தை யடைந்தேன். எ - று.

நான் சுப்பிரமணியசுவாமியைத் தரிசித்து மோக்ஷத்தை யடைந்தேனெனக் கூட்டுக. (௫)

தினகரனந்தநனியிலங்காநின்றசெய்யநற்செந்
தினகரனந்தநிதியாயினனடற்சீரயிலேந்
தினகரனந்தகனைச்செற்றதாளர்திகழ்கனகா
தினகரனந்தநடனர்தனயனென்சிந்தையனே.

இ - ள். தினகரன் நந்த நனி இலங்காநின்ற செய்ய நற்செந்தில் நகரன் - சூரியன் ஒளி குன்றும்படி மிகப்பிரகாசிக்கின்ற செவ்வையாகிய நல்ல திருச்செந்திலென்னும் நகரத்தையுடையவரும்,—நந்தம் நிதியாயினன் - நம்முடைய செல்வமாயினவரும்,—அடற் சீர் அயில் ஏந்தின கரன் - வலிமையையுடைய சிறப்பாகிய வேலாயுதத்தைத் தரித்த கையையுடையவரும்,—அந்தகனைச் செற்ற தாளர் திகழ் கன காதில் நகர் அனந்தன் நடனர் தனயன் - இயமனை வதைத்த பாதங்களையுடையவராகியும் விளங்குகின்ற பாரத்தையுடைய திருச்செவிகளிலே அசைகின்ற அனந்தனாகிய குண்டலத்தையுடைய நடேசராகியுமிருக்கின்றபரமசிவனுடைய திருக்குமாரருமாகிய முருகக்கடவுளானவர்,—என் சிந்தையன் - என் மனத்தின்கண் இருக்கின்றனர்.

சிந்தனையாகத்திசையந்தணர்க்கிறைசேரகங்க
சிந்தனையாகத்தரையளித்தாடரைசென்றிரந்த
சிந்தனையாகத்திடையியைந்தான்றந்தசேயளியாற்
சிந்தனையாகத்தநற்செந்திலாய்நினைச்சேர்ந்தனனே.

இ - ள். சிந்தனை யாகத்து இசை அந்தணர்க்கு இறை- தங்கள் மனமானது வேள்வியின்கண்ணே பொருந்தப்பெற்ற பிராமணர்கட்குத்தலைவரே!—சேர் அகம் கசிந்து அனையாகத் தரை அளித்தாள் - பொருந்திய மனங்கசிந்து மாதாவாக இப் பூமியைப்பெற்ற உமாதேவியையும்,—சென்று தரை இரந்த சிந்தனை - (மாவலிச்சக்கிரவர்த்தியினிடத்திலே) போய்ப் பூமி யையாசித்த வாமனரூபத்தையுடைய விஷ்ணுமூர்த்தியையும்,— ஆகத்திடை இயைந்தான் தந்த சேய் - தமது திருமேனியிலே (இடப்பாதியும் வலப்பாதியுமாகக்) கொண்ட பரமசிவன்பெற்ற குமாரரே!—அளியால் சிந்து அனையா - கிருபையினாலே சமுத் திரத்தைப்* போன்றவரே!—கத்த - கருத்தாவே!—நற்செந்தி லாய் - நன்மையாகிய திருச்செந்தூரையுடையவரே!—நினைச் சேர்ந்தனன் - உம்மை (யான் வந்து) அடைந்தேன். எ - று.

என்னைக் காத்தருளுமென்பது எஞ்சி நின்றது. அன்னை நின்னை என்பன அனை நினை என இடைச்குறைந்து நின்றன. (ரு)

தனத்தலங்காரநிறைநாரியரந்தரத்தசைகே
தனத்தலங்காரநிகழரங்காடச்செய்தன்னினயத்
தனத்தலங்காரதராயியங்கத்தக்கதண்செந்திற்கந்
'தனத்தலங்காரனையானயனேத்திடத்தங்கினனே.

இ - ள். தனத்து அலங்கு* ஆரம் நிறை நாரியர்-முலைகளி னிடத்து அசைகின்ற முத்துமாலைகள் நிறையப்பெற்ற பெண் கள்,—அந்தரத்து அசை கேதனத்து அலங்காரம் நிகழ் அரங்கு ஆட - ஆகாயத்திலே அசைகின்ற கொடிகளையுடைய அழகு விளங்குகின்ற சபையின்கண்ணே நடிக்கவும்,—செய்தன்னின் நயத்த நத்து அலம் கார் அதராய் இயங்கத் தக்க தண் செந்தில்

* அலங்கல் - ஒளிவிடலுமாம்.

கந்தன் - வயல்களிலே சுகத்தையுடையனவாகிய சங்குகள் கலப்பைச்சாலிலே நிற்கின்ற சலமானது வழியாக அதிலூர்ந்து செல்லவுந்தக்க குளிர்ச்சியையுடைய திருச்செந்தூரில் வாழும் கந்தசுவாமியானவர்,—அத்தலம் காரணையான் அயன் ஏத்திடத் தங்கினன் - அந்தஸ்தலத்தினிடத்தே மேகம்போலும் விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவருந் துதிக்க இருந்தருளினார். எ - று.

அலம் ஆகுபெயர். (ச)

தங்கந்தனங்களடையத்தனியெனைத்தள்ளியங்கே
தங்கந்தனங்கடாரச்சென்றனராறிந்தாரிலைகா
தங்கந்தனங்*களலர்காக்கணுரெழிற்றண்செந்தி*லார்
தங்கந்தனங்கநிகர்செக்கர்செய்சஞ்சலத்தினையே.

இ - ள். தனங்கள் தங்கம் அடையத் தனி எனைத்தள்ளி - என் முலைகள் பொன்போலும் தேமலைப்பொருந்தத் தனியாக என்னை இவ்விடத்திலே விட்டுப் பிரிந்து,—அங்கே தங்கு அம் தனங்கள் தரச் சென்றனர் - (தாம் போன) அவ்விடத்தில் இருக்கின்ற அழகிய திரவியங்களைக் கொண்டுவரும்பொருட்டுப் போன என்னுடைய நாயகர்,—காதம் கந்தம் நம் கள் அலர் காக்கண் ஆர் எழில் தண் செந்திலார்தம் கந்தன் - ஓர்காததூரம் மணம்வீசுகின்ற நம்முடைய தேன்பொருந்திய பூக்கள் நந்தனவனங்களிலே நிறைந்திருக்கப் பெற்ற அழகையும் குளிர்ச்சியையுமுடைய திருச்செந்தூரில் வசிக்கின்றவர்களுடைய கந்தசுவாமியினது,—அங்கம் நிகர் செக்கர் செய் சஞ்சலத்தினை அறிந்தாரிலை - திருமேனியைப்போலும் இச்செவ்வானம் எனக்குச் செய்கின்ற துக்கத்தை உணர்ந்தாரில்லை. எ - று.

தலைவன் பிரிந்துழித் தலைவி மாலைகண்டிரங்கல். (ரு)

* நம் செந்தில் எனக் கூட்டுக. விகுதியுடன் கூட்டினுமாம். "நம் செந்தின்மேய வள்ளிமணாளன்" என்னும் அடிகள் திருவாக்குங் காண்க.

சலந்தரனுகந்தரித்தார் தந்தா தன்றன திடைச்சஞ்
சலந்தரனுகம்*தரைநடந்தாலெனச்சார்ந்ததண்டன்
சலந்தரனுகந்தளரச்செற்றார் தனயன்றலநச்
சலந்தரனுகந்தனக்கிறைசேர்செந்திற்சார்ந்திடற்கே.

இ - ள். சலம் தரம் நாகம் தரித்தார் - கங்கையையுந் தலைமாலையையும் சர்ப்பத்தையும் தரித்தவரும்,—தம் தாதன்றனதிடைச் சஞ்சலம் தர - தம்முடைய அடியாராகிய மார்க்கண்டேயரிடத்திலே துக்கத்தைக் கொடுக்கும்பொருட்டு,—நாகம் தரை நடந்தாலெனச் சார்ந்த தண்டன் - யானையானது பூமியிலே நடந்தாற்போலச் சேர்ந்த இயமனையும்,—சலந்தரன் ஆகம் தளரச் செற்றார் தனயன்-சலந்தரனையும் உடலஞ்சோரும்படி கொன்றவருமாகிய பரமசிவனுடைய திருக்குமாரராகியும்,—தரம் நாகந் தனக்கு இறை சேர் செந்தில் தலம் சார்ந்திடற்கு நச்சலம் - மேன்மையையுடைய மலைகளுக்குத் தலைவராகியு மிருக்கின்ற முருகக்கடவுள் வீற்றிருக்குந் திருச்செந்தூராகிய தலத்தையடைதற்கு யாம் விரும்பினோமில்லை. எ - று. (சு)

சாரங்கஞ்சங்கரிகட்கிச்சித்தேய்ந்தகைச்சங்கரனார்†
சாரங்கஞ்சங்கரிதாஞ்சக்கரங்கையிற்றாங்கினன்சேய்
சாரங்கஞ்சங்கரியாநண்ணினர்க்கந்தத்தந்திரத்தா
சாரங்கஞ்சங்கரிதேயெனச்செய்நின்சரண்டந்ததே.†

---

* நாகம் - மலையுமாம். † சங்கரனார், சேயினது அங்கத்தைச் சங்கரித்துத் தம்மையடைந்த குழுவினராகிய சனகர்முதலிய முனிவர்க்கு [உபதேசித்தருளிய] ஆகமத்தினது சரியை கிரியை யோகம் ஞானமென்னும் சீலங்களை, உம்முடையதிருப்பாதம் எனக்குத்தந்தது. என்பது மொன்று. அந்தச் சீலமெனக் கூட்டுக. அகரம் உலகறிசுட்டு. இனரென்பதற்கு - முறையினர் என்பதும் பொருந்தும்.

இ - ள். சாரங்கம் சங்கரி கட்கு இச்சித்து ஏய்ந்த கைச் சங்கரனார் - மானனது உமாதேவியினது கண்ணினதழகுக்கு விரும்பிவந்திருந்தாற்போலப் பொருந்திய திருக்கையையுடைய சங்கரரும்,—சாரங்கம் சங்கு அரிதாம் சக்கரம் கையில் தாங்கினன் சேய் சார் அங்கம் சங்கரியா நண்ணினர்க்கு-சார்ங்கமென்னும் வில்லையும் சங்கையும் அரிதாகிய சக்கரத்தையும் கையிலே தரித்த விஷ்ணுமூர்த்தியுடைய புதல்வனாகிய மன்மதனுடைய பொருந்திய உடலத்தைக் கொன்று (முன்போல யோகத்து) இருந்தவருமாகிய பரமசிவனுக்கு,—அந்தத் தந்திரத்து ஆசாரம்-வேதத்தின் முடிவாகிய சைவாகமத்தினது சீலத்தை,—கஞ்சம் கரிதேயெனச் செய் நின் சரண் தந்தது - செந்தாமரைமலரும் கரிதென்று சொல்லும்படி செய்கின்ற உம்முடைய பாதம் கொடுத்தது. எ - று.

இரண்டாமடியிலே சார்ங்கமென்பது எதுகைநோக்கிச் சாரங்கமென ஓரகரம் விரியப்பெற்று நின்றது. (எ)

தந்தனஞ்சங்கையணிகரர்சேர்க்கத்தடங்கணலை
தந்தனஞ்சங்கையலரென்செய்யாடங்கச்சற்சனர்நித்
தந்தனஞ்*சங்கையகலறத்தி*செந்திற்சார்கதனித்
தந்தனஞ்சங்கையநகனிளையனற்றூடாற்கே.

இ - ள். சங்கை அணி கரர் தம் தனம் சேர்க்கத் தடங்கண் அலைதந்தனம் - சங்குவளையலையணிந்த கையினையுடைய பெண்கள் தங்கள் முலைகளிலே புணர்க்க அவர்களுடைய விசாலமாகிய கண்களினாலே யாம் அலைந்தோம்:—சம் கை - (இனி அவர்களோடனுபவிக்குஞ்) சுகத்தை நீ வெறுத்துவிடு;—அலர்

* அறத்துத் தனம் ஈ சங்கை அகல் எனக் கூட்டி, அகல் என்பதை ஏவல்வினையாகக் கொள்ளினுமிழுக்கின்று.

என் - (இதனாலுண்டாகும்) பழிமொழி நமக்கு ஏன்?—செய்யாள் தங்கச் சற்சனர் நித்தம் தனம் சங்கை அகல் அறத்து ஈ - இலக்குமி வசிக்கச் சன்மார்க்கமுடைய சனங்களுக்கு எப்பொழுதுந் திரவியங்களை ஐயம் நீங்கிய தருமநெறியிலே கொடு:—தனித்தந்தன் அஞ்சு அங்கை அநகன் இளையன் நற்றாள் தரற்குச் செந்தில் சார்க - ஒற்றைக்கொம்பினையுடையவரும் ஐந்தாகிய அழகிய கையையுடைய பாவமில்லாதவருமாகிய விநாயகக்கடவுளுடைய தம்பியாராகிய சுப்பிரமணியசுவாமியானவர் தம்முடைய நன்மையாகிய பாதங்களை நமக்குத்தரும்பொருட்டு அவர் வீற்றிருக்குந் திருச்செந்தூரை அடை. எ - று.

தரங்கனந்தாரனனியேற்றெழிற்செந்திற்றந்தைநிரந்
தரங்கனந்தாரகநாடினென்றேநினைசத்தியரந்
தரங்கனந்தாரநகரீசர்சேய்கிரித்தையலர்க்கந்
தரங்கனந்தாரளகஞ்சிற்றிடைசலசங்கண்களே.

. இ - ள். தரங்கம் நந்து ஆரல் நனி ஏற்று எழிற்செந்தில் தந்தை - கடற்றிரைகள் சங்குகளை டதிலின்மேலே மிக ஏற்றுகின்ற அழகையுடைய திருச்செந்தூரில் வீற்றிருக்கும் பிதாவாயும்,—நிரந்தரம் தாரகம் நாடின் கனம் என்று நினைசத்தியர் அந்தரங்கம் நந்தார் - எக்காலத்தும் பிரமஸ்வரூபத்தை விசாரிக்கில் நமக்கு மேன்மையாகுமென்று நினைக்கின்ற மெஞ்ஞானிகளுடைய அந்தரங்கத்திலே கெடுதலின்றி விளங்குகின்றவரும்,—அநகர் ஈசர் - ஆணவ மில்லாதவருமாகிய பரமசிவனுடைய,—சேய் கிரித் தையலர்க்கு-திருக்குமாரராகியுமிருக்கின்ற முருகக்கடவுளுடைய மலையிலிருக்கும் பெண்ணுக்கு,—தார் அளகம் கனம் - மாலையையுடைய அளகமானது மேகத்தைப்போலும்;—சிற்றிடை அந்தரம்-சிறுமையாகிய இடையானது ஆகா

முமபு

யத்தைப்போலும்;—கண்கள் சலசந்தண்களானவை செந்தாமரைமலரைப்போலும். எ - று.

தலைவியினதவயவம் புகழ்ந்தது. (௯)

சங்கங்களங்கழனிக்கரைசேர்செந்திற்றங்கின*நஞ்
சங்கங்களங்கரநண்ணரன்*சேயெய்தச்சார்ந்தனஞ்சற்
சங்கங்களங்கனியைநிகர்தண்டதரற்கினிய
சங்கங்களங்கரெனநின்றயாங்கணெஞ்சங்கரைந்தே.

இ - ள். சங்கங்கள் அம் கழனிக்கரை சேர் செந்தில் தங்கினம் - சங்குகள் அழகையுடைய வயல்களினது கரைகளிலே பொருந்திய திருச்செந்தூரின்கண் இருந்தனம்;—நஞ்சம் கம் களம் கரன் நண் அரன் சேய் எய்த - நஞ்சும் தலையும் கழுத்திலுங் கையிலும் இருக்கப்பெற்ற பரமசிவனுடைய திருக்குமாரராகிய முருகக்கடவுளை அடையும்பொருட்டு,—சற்சங்கம் சார்ந்தனம்-சற்சங்கத்தைச் சேர்ந்தோம்;—களங்கனியைநிகர் தண்டதரற்கு இனி அசங்கம் - களாப்பழத்தைப்போலும் நிறத்தையுடைய இயமனுக்கு இனி அஞ்சோம்;—களங்கரென நின்ற யாங்கள் நெஞ்சம் கரைந்து-குற்றத்தை யுடையவர்களாய் நின்ற நாங்கள் மனம் உருகி. எ - று.

நாங்கள் மனமுருகி இருந்தனமெனக் கூட்டுக. (௧௦)

காத்தரிக்கங்கணங்கட்டாரணர்தந்தகந்தாழ [சா
காத்தரிக்கங்கணங்கண்டசெப்செந்திலெங்காங்கெயர்
காத்தரிக்கங்கணங்கட்கயனார்க்கெழிற்காசணிசே
காத்தரிக்கங்கணங்கற்றிடத்தாங்கினர்கைச்சத்தியே.

* தங்கின சேயை எய்தச் சற்சங்கத்தை யாங்கள் நெஞ்சங்கரைந்து சார்ந்தனம் எனக் கூட்டிப் பொருள்கூறினும் பொருந்தும்.

இ - ள், கரத்து அரிக் கங்கணம் கட்டு அரனார் தந்தகந்தர்-கையிலே சர்ப்பமாகிய கடகத்தைக் கட்டிய பரமசிவன் பெற்ற கந்தசுவாமியும்,—அழகர் - அழகையுடையவரும்,—அத்தர்-பிதாவும்,—இக்கு அங்கணம் கண்ட செய்ச்செந்தில் எங்காங்கெயர்-கரும்புகள் சேற்றினிடத்து உண்டாகப்பெற்ற வயல்களையுடைய திருச்செந்தூரில் வீற்றிருக்கின்ற நம்முடைய காங்கேயருமாகிய முருகக்கடவுளானவர்,—சாகரத்து அரிக்கு - திருப்பாற்கடலிலே நித்திரைசெய்கின்ற விஷ்ணுமூர்த்திக்கும்,—அம் கணங்கட்கு - அழகிய (தேவர்முதலிய) கணங்களுக்கும்,—அயனார்க்கு - பிரமதேவருக்கும்,—எழிற்காசு அணி சேகரத்து அரிக்கு - அழகையுடை இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட முடியையுடைய இந்திரனுக்கும்,—அங்கு அணங்கு அற்றிட-அவ்விடத்தே (சூரன் முதலிய அசுரர்களாலுண்டாகிய) வருத்தம் நீங்கும்பொருட்டு,—கைச்சத்தி தாங்கினர் - திருக்கையின் கண்ணே வேலாயுதத்தை தரித்தருளினர். எ - று.

காங்கேயரென்பது காங்கெயரெனக் குறுக்கல்விகாரம்பெற்று நின்றது. (கக)

சத்திக்கரத்தனகச்சேயங்கத்தினைத்தந்தனனற்
சத்திக்கரத்த*னகச்சிலையாளிதன்றுளிணைநே
சத்திக்கரத்தனகத்தியைந்தேத்தரன்றந்தகதிர்ச்
சத்திக்கரத்தனகசெந்திலாய்நின்சரண்சரணே.

இ - ள். சத்திக் கரத்தன் அகச் சேய் அங்கத்தினைத் தந்தனன் - வலிமையையுடைய முதலையினது வயிற்றினுள்ளே புகுந்த பிராமணப்பிள்ளையினுடைய உடம்பைச் (சுந்தரமூர்த்திநாய

* சத்திக்கு அரத்தன் என்பதற்கு, உமாதேவியாருக்குச் சமபாதியாக விளங்குகின்றவரும் என்பதும் ஒருபொருள். அர்த்தன் அரத்தனென ஓகரம் விரிந்தது; சாரங்கம் என்புழிப்போல.

ஞருடைய திருப்பதிகத்தின் பொருட்டு) அழைத்துக்கொடுத்த வரும்,—நல் சத்திக்கு அரத்தன்-நன்மையாகிய (தமதிடப்பாதியிலிருக்கும்) உமாதேவிக்கு (வலப்பாதியிலே) சிவந்த ரூபமாக விளங்குகின்றவரும்,—நகச் சிலை ஆளி - மகாமேருமலையை வில்லாக ஆண்டவரும்,—தன் தாளிணை - தம்முடைய இரண்டு பாதங்களையும்,—நேசத்து இக்கர் அத்தன் அகத்து இயைந்து எத்து அரன் தந்த - அன்பினைக் கருப்புவில்லையுடைய மன்மதனுக்குப் பிதாவாகிய விஷ்ணுமூர்த்தி மனசிலே பொருந்தித் துதிக்கின்ற சங்காரகர்த்தாவுமாகிய பரமசிவன்பெற்ற,—கதிர்ச் சத்திக் கரத்து அனக - கிரணத்தையுடைய வேலாயுதத்தைத் தரித்த கையினையுடைய மலமுத்தரே!—செந்திலாய் - திருச்செந்தூரையுடையவரே!—நின்சரணே சரண் - உம்முடையபாதங்களே எனக்குப் புகலிடம். எ - று. (கஉ)

சரிதங்கையாரக்கலன்றந்தனந்தரித்தார்*நரகே
சரிதங்கையாரக்கரிடத்தினார்தந்த*தண்செந்திலே
சரிதங்கையாரக்கணத்தினனல்கைத்தல்சரதந்தஞ்சீர்ச்
சரிதங்கையாரக்கசிந்திசைக்கின்றதகையினர்க்கே.

இ - ள். சரி தம் கை ஆரக் கலன் தம் தனம் தரித்தார் நரகேசரி தங்கையார் இடத்தினார் - வளையலைத் தமது கையிலும் முத்துமாலையாகிய ஆபரணத்தைத் தமது முலையிலும் தரித்தவரும் நரசிங்கவுருவங்கொண்ட விஷ்ணுமூர்த்தியினுடைய தங்கையாருமாகிய உமாதேவியார் பொருந்திய வாமபாகத்தையுடையவராகிய,—அக்கர் தந்த - சங்குமணியை அணிந்த பரமசிவன் பெற்ற,—தண் செந்தில் நேசர் - குளிர்ச்சியையுடைய

---

* தரித்தவரும் தங்கையாரும் அக்கரது வாமபாகத்தை உடையவருமாகிய உமாதேவியார்பெற்ற எனவும், இருவரும் பெற்ற எனவும் பொருள் கூறலாம்.

திருச்செந்தூரில் விருப்பத்தையுடைய முருகக்கடவுள்,—இதம் கையார் - இன்பத்தை வெறாது செய்வார்;—அக்கணத்து இன்னல் கைத்தல் சரதம் - அந்தக்கணத்திலே துன்பத்தை வெறுத்தொழித்தல் சத்தியம்;—தம் சீர்ச் சரிதம் கை ஆரக் கசிந்து இசைக்கின்ற தகையினர்க்கு - தமது சிறப்பையுடைய சரித்திரத்தை ஒழுக்கம் பொருந்தும்படி மனங்கசிந்து சொல்கின்ற அன்பினையுடையவர்களுக்கு. எ - று.

முருகக்கடவுள் அன்பினையுடையவர்களுக்கு இன்பத்தைச் செய்வார் துன்பத்தையொழித்தல் சத்தியமெனக் கூட்டுக. (கங)

இன்னந்தியங்கிநிகர்த்தசெங்கேழன்கையீரிரண்டா
யின்னந்தியங்கிரியைச்சிலையாக்கிதன்சேயெழிற்செய்
யின்னந்தியங்கிரிருங்கஞ்சஞ்சேர்செந்திலெந்தைதனை
யின்னந்தியங்கிசையக்கதியீந்தனனென்றனக்கே.*

இ - ள். இன் அந்தி அங்கி நிகர்த்த செங்கேழன் - இனிதாகிய செவ்வானத்தையும் அக்கினியையும் போன்ற செந்நிறத்தையுடையவரும்,—கை ஈரிரண்டு ஆய் இல் நந்தி அம் கிரியைச் சிலையாக்கிதன் சேய் - நான்கு திருக்கைகளையுடைய மாதாவையில்லாத நந்தியென்னுந் திருநாமத்தையுடையவரும் அழகையுடைய மகாமேருமலையை வில்லாக்கிக்கொண்டவருமாகிய பரமசிவனுடையதிருக்குமாரராகியும்,—எழிற்செய்யில் நந்து இயங்கி இரும் கஞ்சம் சேர் செந்தில் எந்தை - அழகைப்பொருந்திய

* இச்செய்யுளை இனனந்தியங்கியெனப் பாடமோதி, இனன் அந்தி எனப்பிரித்து இனன் சூரியன் எனவும், கை ஈரிரண்டு ஆயினன் எனப்பிரித்து திருக்கரங்கள் நான்காகப்பெற்றவரும் எனவும், செய் இனம் நந்து எனப்பிரித்து வயல்களிலே கூட்டமாகிய சங்குகள் எனவும், தனை இன்னல் நந்தி எனப்பிரித்து பாசத்தாலாகிய பிறவித்துன்பத்தால் மிக்கு எனவும் பொருள்கூறலும் ஒன்று. இனல்—இடைக்குறை.

வயல்களிலே சங்குகள் ஊர்ந்து சென்று பெருமையாகிய தாம ரைகளிலே பொருந்தியிருக்கப்பெற்ற திருச்செந்தூரில் வீற்றி ருக்கும் நமது பிதாவாகியுமிருக்கின்ற முருகக்கடவுளானவர்,— தளையின் நந்தி அங்கு இசைய - பாசத்தினுற் கெட்டுலேந்து அந்தஸ்தலத்தின்கண்ணே சேர,—என்றனக்குக் கதி ஈந்த னன் - எனக்கு மோக்ஷத்தைத் தந்தருளினர். எ - று. (கச)

தனக்கடங்காரெயில்செற்றகங்காளன்றனயனங்கந்
தனக்கடங்காதிழிதந்திக்கிளையன்றளிரெழிற்சந்
தனக்கடங்காநிறைசெந்திலினற்சேய்சயிலநங்கை
தனக்கடங்காணினச்சாரிலேயண்ணறரணியிலே.*

இ - ள் தனக்கு அடங்கார் எயில் செற்ற கங்காளன் தனயன் - தமக்கு அமையாத அசுரர்களுடைய மும்மதில்களை யும் அழித்த முழுவெலும்பையணிந்த பரமசிவனுடைய குமா ரரும்,—அம் கந்தன் - அழகைப்பொருந்திய கந்தசுவாமியும்,— அக் கடம் காது இழி தந்திக்கு இளையன் - அந்த மதமானது காதினின்றும் சொரிகின்ற யானையாகிய விநாயகக்கடவுளுக் குத் தம்பியும்,—தளிர் எழிற் சந்தனக் கடம் கா நிறை செந்தி வில் நற்சேய் - தளிர்களைப்பொருந்திய அழகையுடைய சந்தன மரங்களின் காடுகளும் பூஞ்சோலைகளும் நிறையப்பெற்ற திரு ச்செந்தூரில் வீற்றிருக்கும் நல்ல இளையோருமாகிய சுப்பிரம ணியசுவாமியினது,—சயில நங்கை தனக்கடம் காணின் - மலை யிலிருக்கின்ற பெண்ணினுடைய தனமாகிய குடங்களைக்காண் பாராயின்,—அண்ணல் தரணியில் நச்சார் இலை - தலைவனே, இப்பூமியின்கண்ணே விரும்பாதாரில்லை. எ - று. (கரு)

---

* இது பாகன் தலைவியை வியத்தல்.

தாணியனையநிறத்தண்ணலாரிரந்தன்றளந்த
தாணியனையனிறைஞ்சயிலார்நற்றனிச்சிலையாந்
தாணியனையனகனணையந்தரிதந்திடுகந்
தாணியனையனெஞ்சேயலர்த்தாள்கடரித்திறைஞ்சே.

இ - ள். தாணி அனைய் நிறத்து அண்ணலார் - சூரியனைப் போன்ற நிறத்தையுடைய பெருமையிற் சிறந்தவராகியும்,— அன்று இரந்து அளந்த தரணியன் அயன் இறைஞ்சு அயிலார்- அக்காலத்து யாசித்து அளக்கப்பட்ட பூமியையுடைய விஷ்ணு மூர்த்தியும் பிரமதேவரும் வணங்குகின்ற வேலாயுதத்தையுடையவராகியும்,—நல் தனிச் சிலையாம் தரணியன் ஐ அனகன் அணை அந்தரி தந்திடு கந்தர் - நல்ல ஒப்பில்லாத வில்லாகிய மலையையுடையவரும் அழகினையுடைய மலரகிதருமாகிய பரமசிவனைச்சேர்ந்த உமாதேவி பெற்றருளிய கந்தசுவாமியாகியுமிருக்கின்ற முருகக்கடவுளே,—அணி அல் - (நமக்குப்) பெருமைபொருந்திய அரணாயிருக்கின்றார்;—நெஞ்சே நையல் - மனமே! நீ வருந்தாதே;—அலர்த் தாள்கள் தரித்து இறைஞ்சு- அவருடைய செந்தாமரைமலர்போலுந் திருவடிகளைத் தாங்கி வணங்கு. எ - று.

அல்லென்பது மதிலுக்குப் பெயராமாறு "இரவுமிருளு மிரும்பின் பெயரு—மெயிலு மிரவியு மல்லெனலாகும்" என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தாலுணர்க. (கக)

தரிக்கனந்தங்கலைநீள்சடைக்கைக்கனற்சங்கரனந்
தரிக்கனந்தங்கலைநீதிகள்சாற்றரன்றந்தநற்கந்
தரிக்கனந்தங்கலைநீர்ச்செய்க்கணுஞ்செந்திலார்தளையா
தரிக்கனந்தங்கலைநீத்திழந்தேங்காச்சங்கங்களே.

இ - ள். தரிக்க நந்து அம் கலைநீள் சடைக் கைக்கனற் சங்கரன் - தன்னைச் சூடிக்கொண்ட மாத்திரத்தில் ஆக்கம் பெற்ற அழகிய சந்திரகலையையுடைய நீண்ட சடையையும் கையிலே பொருந்திய அக்கினியையுமுடைய சங்காரும்,—அந் தரிக்கு அனந்தம் கலை நீதிகள் சாற்று அரன் - உமாதேவிக்கு முடிவில்லாத சாத்திரமார்க்கங்களை உபதேசித்த சங்கார கர்த் தாவுமாகிய பரமசிவன்,—தந்த நற் கந்தர் - பெற்ற நன்மையை யுடைய கந்தசுவாமியாகியும்,—இக்கு அனம் தங்கு அலைநீர்ச் செய்க்கண் ஆம் செந்திலார் - கரும்புகளானவை அன்னங்கள் இருக்கின்ற அலையையுடைய ஜலம் பொருந்திய வயல்களிலே உண்டாகப்பெற்ற திருச்செந்தூரையுடையவராகியு மிருக்கின்ற முருகக்கடவுளுடைய,—தளை ஆதரிக்க - மாலையை விரும்பின மாத்திரத்தில்,—நந்தம் கலை நீத்துக் கரச் சங்கங்கள் இழந்தேம்- நம்முடைய வஸ்திரத்தை நீங்கிக் கையிலிருந்த சங்கவளையல் களையும் இழந்தனம். எ - று.

முருகக்கடவுள் பவனிவருதல் கண்டு மால் கொண்டு வஸ்திர மும் வளையலு மிழந்துநின்ற மகளிர் சொல்லியது. (சஎ)

சங்கரிபக்கநிகர்த்தநின்றாதைதகையதென்னச்
சங்கரியக்கிறைஞ்செழிற்செந்திற்சடானனகஞ்
சங்கரியக்கதிர்தானிசைகின்றசரணத்திறற்
சங்கரிபக்கணத்தேயெற்செறியந்தகற்சினந்தே.

இ - ள். சங்கரி அக்கம் நிகர்த்த நின் தாதை தகையது என்ன - உமாதேவியுடைய கண்ணைப்போன்ற உம்முடைய பிதாவாகிய பரமசிவனது செய்கையைப்போல,—சங்கு அரி யக்கர் இறைஞ்சு எழிற் செந்திற் சடானன - சங்கையுடைய் விஷ்ணுமூர்த்தியும் இயக்கர்களும் வணங்குகின்ற அழகை

யுடைய திருச்செந்தூரில் வாழும் ஆறுதிருமுகங்களையுடைய வரே!—கஞ்சம் கரியக் கதிர் இசைகின்ற சரணத்தினால் சங் கரி - தாமரைமலரும் கருகும்படியாக ஒளி பொருந்துகின்ற உம்முடைய பாதத்தினாற் கொன்றருளும்;—அக்கணத்தே எற் செறி அந்தகற்சினந்து - அந்தக்கணத்தே என்னைச் சேரும் இயமனைக் கோபித்து. எ - று.

இயமனைக் கோபித்துக் கொன்றருளுமெனக் கூட்டுக. தான்-அசை.

தகரனலங்கநிறைநிறத்தான்செந்திற்றந்தைசங்கேய்ந்
தகரனலங்கனளினதனத்தினன்றாழளகந்
தகரனல்கடாநின்றசத்தியன்றாளெனினந்
தகரநலங்கனன்றலெனச்சீறிடத்தக்கரன்றே.

இ - ள். தகரன் - மேடவாகனத்தை யுடையவராகியும்;—*நல் அங்கம் நிறை நிறத்தான் - நன்மைபாகிய திருமேனியிலே நிறைந்தவண்ணத்தை யுடையவராகியும்,—செந்தில் தந்தை - திருச்செந்தூரில் வாழும் பிதாவாகியும்,—சங்கு எய்ந்த கரன் அலங்கல் நளினதனத்தினன் தாழ் - சங்கு பொருந்திய கையை யுடைய விஷ்ணுமூர்த்தியும் மாலையையணிந்த தாமரை யாசனத்தினையுடைய பிரமதேவரும் வணங்குகின்ற,—அளகம் தகர நலங்கள் தர நின்ற சத்தியன் - அளகமானது மயிர்ச்சாந்தாலாகிய இன்பத்தைத் தரும்படி நின்ற கிரியாசத்தியாகிய தெய்வயானையையுடையவராகியு மிருக்கின்ற கந்தசுவாமியினுடைய,—தாளெனின் - பாதமென்பேனாயின்,—அந்தகர் அனலம் கனன்றலெனச் சீறிடத் தக்கரன்று - யமனார் வடவாமுகாக்கினி சுவாலித்தாற் போலக் கோபித்தற்குத் தக்கவரல்லர். எ - று.

* எலும்புமாலை செறிந்த நன்மையாகிய திருமார்பை உடையவர் எனினும் ஒக்கும்.

தக்கனகத்தினடற்றணித்தானயன்றன்கதிசந்
தக்கனகத்திகிரிக்கரனாக்கங்கடந்தளிக்கத்
தக்கனகத்தியனையாளியென்னெஞ்சதாஞ்சலசந்
தக்கனகத்தினகரன்றன்செந்திலைச்சந்திக்கினே.

இ - ள். தக்கன் அகத்தின் அடல் தணித்தான் (கதி) - தக்கனுடைய அகங்காரத்தினது வலிமையை அடக்கிய உருத்திர மூர்த்தியினுடைய பதத்தையும்,—அயன்றன் கதி-பிரமனுடைய பதத்தையும்,—சந்தக் கனகத் திகிரிக் கரன் ஆக்கங்கள் - அழகினையுடைய பொன்மயமாகிய சக்கரத்தைத் தரித்த கையையுடைய விஷ்ணுவினது செல்வத்தையும்,—தந்து அளிக்கத் தக்கன் — தந்து காக்கத்தக்கவர்;—அகத்தியனை ஆளி - அகஸ்திய மகாமுனிவரை ஆண்டருளினவரும்,—என் நெஞ்சதாம் சலசம் தக்கன் நகு அத்தினகரன் - என்னிதயமாகிய தாமரைமலருக்கு அன்பராகி விளங்குகின்ற அந்த ஞானசூரியருமாகிய முருகக் கடவுளானவர்,—தன்செந்திலைச் சந்திக்கின் - தம்முடைய திருச்செந்தூரைச் சந்திக்கில். எ - று.

முருகக்கடவுளானவர் தம்முடைய திருச்செந்தூரைச்சந்திக்கில் உருத்திரமூர்த்தியினுடைய பதத்தையும் பிரமனுடைய பதத்தையும் விஷ்ணுவினுடைய செல்வத்தையும் தந்து காக்கத்தக்கவர் எனக் கூட்டுக. (உ0)

சந்தத்தனத்திகடந்திறத்தாசைதலத்தினிச்சை
சந்தத்தனத்தினசைதீரடியன்றனதிலிற்சேர்
சந்தத்தனத்தியதளான்றனயதடக்கயல்கஞ்
சந்தத்தனத்தினினங்கீழிழிசெந்திற்றங்கினற்கே.

இ - ள். சந்தத் தனத்திகள் தம் திறத்து ஆசை - சந்தனத்தையணிந்த தனத்தையுடைய பெண்களது காரணத்தாலாகிய ஆசையையும்,—தலத்தின் இச்சை - மண்ணில் வைக்கப்படும் ஆசையையும்,—சந்தத் தனத்தின் நசை தீர் - அழகையுடைய பொன்னிலேறும் ஆசையையும் தீர்த்தருளும்;—அடியன்றனது இல் இல் சந்து சேர் அத்தன் அத்தி அதளான் தனய - தமதடியாராகிய சுந்தரமூர்த்திநாயனருடைய மனைவியாகிய பரவையினது வீட்டிலே தூதாகச் சென்ற பிதாவும் யானையினது தோலையுடையவருமாகிய பரமசிவனுடைய குமாரரே!—தடக் கயல் சஞ்சம் தத்த நத்தினினம் கீழ் இழி செந்தில் தங்கினற்கு - பெரிய கயன்மச்சங்கள் தாமரைமலரிலே பாய (அதின் மேற்றுயின்ற) சங்குக்கூட்டங்கள் கீழேயிறங்கப்பெற்ற உம்முடைய திருச்செந்தூரிலே வந்து வசித்த எனக்கு. எ - று.

பரமசிவனுடைய குமாரரே எனக்குப் பெண்களது காரணத்தாலாகிய ஆசையையும் மண்ணில்வைக்கப்படு மாசையையும் பொன்னிலேறு மாசையையும் தீர்த்தருளுமெனக் கூட்டுக. (உ௪)

தங்கச்சினகரநேராக்கலந்திச்சகநிறைந்தார்
தங்கச்சினகரநேயர்தனயன்றனக்கினிதாந்
தங்கச்சினகரநீள்செந்தினாட்டிற்றனகரிதந்
தங்கச்சினகரநற்கனனென்னங்கடையலர்க்கே.

இ - ள். தங்கு அச்சின் அகரம் நேராக் கலந்து இச்சகம் நிறைந்தார் - பொருந்திய உயிரெழுத்துக்களுக்குள்ளே அகரமாகிய அக்கரத்தைப்போன்று உயிர்கள்தோறும் பொருந்தி இவ்வுலகத்திலே வியாபித்தவரும்,—தம் கச்சி நகரம் நேயர் - தம்மு

டைய காஞ்சீபுரத்தில் விருப்பத்தை யுடையவருமாகிய பரமசிவனுடைய,—தனயன் றனக்கு இனிதாம் - குமாரராகிய முருகக்கடவுளுக்கு இனியதாகிய,—தங்கச் சினகரம் நீள் செந்தில் நாட்டில் - பொன்னுலாய கோயிலானது உயர்ந்திருக்கப் பெற்ற திருச்செந்தூரைத் தன்னிடத்துடைய நாட்டின்கண்ணே,—கரி தந்தத் தனம் கச்சில் நகர நற்கனன் என் நங்கள் தையலர்க்கு-யானைக்கோட்டைப்போலும் தனங்கள் கச்சுள்ளே நின்றும் பிதுங்குதற்கு நல்ல கனம் யாது காரணத்தாலுண்டாயது எங்களுடைய பெண்ணுக்கு? எ - று.

பாங்கியே நீ சொல்லென்பது எஞ்சி நின்றது. செவிலி தலைவியினது முலை யிறுமாப்பைக்கண்டு ஐயுற்றுப் பாங்கியை வினவல். ()

அலரினனந்தலையாழிகண்டாங்குச்சிகியினிடை
யலரினனந்தநிகரயிலான்செந்திலாயிழையை
யலரினனந்தநினைநிலந்தேர்ந்ததற்கன்றயலா
ரலரினனந்தஞ்சொலற்கிடனோநெஞ்சழிகின்றதே.

இ - ள். ஆழி நனந்தலை அலரி கண்டாங்கு - சமுத்திரத்தினது நடுவிலே சூரியன் தோன்றினாற்போல,—சிகியினிடை அலர் இனன் - மயில்வாகனத்திலே விளங்குகின்ற தலைவரும்,—அந்தம் நிகர் அயிலான்* — அழகிய ஒளிபொருந்திய வேலாயுதத்தை யுடையவருமாகிய முருகக்கடவுளது,—செந்தில் ஆயிழை-திருச்செந்தூரிலிருக்கும் பெண்ணுக்கு,—ஐயலர் இனல் நந்த நினை நிலம் தேர்ந்ததற்கு-ஐந்து புஷ்பபாணங்களாலாகிய துன்பங்கெடும்படி உன்னை இந்நாட்டின்கண்ணே தேடியதற்கு,—

* அந்தம் நிகர் அயில் - பகைவர் இறத்தலைப்பொருந்தப்பொருகின்ற அயிலுமாம். நிகர்த்தல்-பொருதல்.

அன்று அயலார் அலரின் அனந்தம் சொலற்கு இடனு நெஞ்சு அழிகின்றது - அந்நாளிலே அயலவர்கள் பழிமொழியாக அள வில்லாத வார்த்தைகளைப் பேசுதலுக்கு இடமாக மனம் வருந்து கின்றது. எ - று.

அலரறிவுறுத்தல். (உரு)

தேயத்தியங்கியலகிறலங்களிற்சென்றடிக
டேயத்தியங்கியலையறிடங்கதிசேர்தலறைந்
தேயத்தியங்கினநித்திலந்தாமெறிசெந்திலடைந்
தேயத்தியங்கிதரித்தான்றனயற்றெரிசிக்கினே.

இ - ள். தேயத்து இயங்கி அலகில் தலங்களில் சென்று அடிகள் தேயத் தியங்கி அலையல் - தேசங்கள்தோறுஞ் சஞ்ச ரித்து அளவில்லாத க்ஷேத்திரங்களிலே போய்க் கால்கள்தே யும்படி தியங்கி அலையாதே;—கதி சேர்தல் திடம் - மோக்ஷ த்தை அடைதல் நிச்சயம்:—அறைந்து அத்தி அங்கு இனம் நித்திலம் எறி செந்தில் அடைந்து - ஆரவாரித்துச் சமுத்திரமா னது அவ்விடத்திற் கூட்டமாகிய முத்துக்களைக் கரையி லெறி யப்பெற்ற திருச்செந்தூரைச் சேர்ந்து,—எய் அத்தி அங்கி தரித்தான் தனயன் தெரிசிக்கின் - அவ்விடத்தில் வீற்றிருக் கின்ற எலும்பையும் அக்கினியையும் தரித்த பரமசிவனுடைய திருக்குமாரராகிய முருகக்கடவுளைத் தரிசிக்கில். எ - று.

முருகக்கடவுளைத் தரிசிக்கில் மோக்ஷத்தையடைதல் நிச்சயமெ னக்கூட்டுக. மூன்றுமடியின் முதலிலிருக்கும் ஏகாரமும் பின்னருள் ள தானும் அசைநிலைகள்.

(உச)

சிக்கத்தனங்கடிறக்கின்றகன்னியர்சிந்தைகணே
சிக்கத்தனங்களளித்தழிந்தேற்கெழிற்செந்திறரி
சிக்கத்தனங்கழலேயேத்தநல்கினன்சீர்நிறைகா
சிக்கத்தனங்களகிலேசன்றந்ததிறற்கந்தனே.

இ - ள். சிக்கத் தனங்கள் திறக்கின்ற கன்னியர் சிந்தைகள் நேசிக்க - கண்டவர்கள் தங்களிடத்தில் அகப்படும்படி முலைகளைத் திறவாநின்ற பெண்களுடைய மனம் விரும்பும் பொருட்டு,—தனங்கள் அளித்து அழிந்தேற்கு - திரவியங்களை அவர்களுக்குக் கொடுத்துக் கெட்டவனாகிய எனக்கு,—எழிற் செந்தில் தரிசிக்க - அழகையுடைய திருச்செந்தூரைத் தரிசிப்பதற்கும்,—தன் அம் கழலை ஏத்த - தம்முடைய அழகியபாதத்தைத் துதிப்பதற்கும்,—நல்கினன்-அருள்செய்தார்:—சீர் நிறை காசிக் கத்தன் நங்கள் அகிலேசன் தந்த திறற்கந்தன் - சிறப்புப் பொருந்திய காசியில் வீற்றிருக்கும் கருத்தாவாகிய எங்கள் விசுவநாதசுவாமிபெற்ற வலிமையையுடைய கந்தசுவாமியானவர்.

கந்தசுவாமியானவர் எனக்குத் திருச்செந்தூரைத் தரிசிப்பதற்கும் தம்முடைய பாதத்தைத் துதிப்பதற்கும் அருள்செய்தாரெனக் கூட்டுக. (உரு)

கந்தரங்கானந்தனிற்சென்றடங்கிலென்காசிக்கநே
கந்தரங்கானந்தநண்ணிலென்கன்னியர்கட்டளக
கந்தரங்கானந்தநின்றுடெழிற்செந்திற்கண்டிறைஞ்சிக்
கந்தரங்கானந்தநல்கச்சனனங்கடந்திலரே.

இ - ள். கந்தரம் கானந்தனில் சென்று அடங்கில் என்- முழையிலும் காட்டிலும் போய்ப் புலனொடுங்க இருந்ததனாற்

பயன் யாது?—காசிக்கு அநேகந்தரம் கால் நந்த நண்ணில் என்-காசிக்கு அநேகமுறை கால்கள் வருந்தும்படி போனதிஞற் பயன் யாது?—கன்னியர் கந்தரம் கட்டு அளகம் கான் நந்த நின்று ஆடு எழிற்செந்தில் கண்டு இறைஞ்சி - பெண்கள் மேகம்போலும் நிறத்தையுடைய கட்டப்பட்ட அளகத்திலே வாசம் மிக நின்று நடிக்கின்ற அழகையுடைய திருச்செந்தூரைத் தரிசித்து வணங்கி,—கந்தர் அங்கு ஆனந்தம் நல்க - முருகக்கடவுள் அவ்விடத்திற் சிவானந்தத்தை அருள,—சனனம் கடந்திலர் – அதஞலே தங்கள் பிறவியை நீங்காதவர்கள். எ - று.

சிவானந்தம்போற் கர்மயோகங்கள் பயன்படா வென்பது கருத்து. (உசு)

கடனந்திஞகத்ததளாடையாயெனைக்காக்கனிற்கே
கடனந்திநாணிறத்தாயெனநாரணன்கண்டிறைஞ்செங்
கடனந்திநாதன்றனயனற்செந்திலிற்காரிகையே
கடனந்திஞபகங்காதலர்தேரிற்கலிக்கின்றதே.

இ - ள். கடம் நந்து இல் நாகத்து அதள் ஆடையாய் - மதக்கெடுதலில்லாத யானையினது தோலாகிய வஸ்திரத்தையுடையவரே!—எனைக் காக்கல் நிற்கே கடன் - அடியேனை இரட்சித்தல் உமக்கே கடஞம்:—அந்தி நாண் நிறத்தாய் என - செக்கர் மேகம் நாணத்தக்க செந்நிறத்தையுடையவரே என்று,—நாரணன் கண்டு இறைஞ்சு எங்கள்தம் நந்தி நாதன் தனயன் - விஷ்ணுமூர்த்தி தரிசித்து வணங்குகின்ற எங்களுடைய நந்தியென்னும் பெயரைப்பொருந்திய பரமசிவனுடைய திருக்குமாரராகிய முருகக்கடவுளது,—நற்செந்திலில் காரிகையே-நன்மை

யாகிய திருச்செந்தூரிலிருக்கும் பெண்ணே!—கடல் நந்தின் நாயகம் காதலர் தேரில் கலிக்கின்றது - சமுத்திரத்திலேதோன்றிய சங்குகளுடைய நாயகமாகிய வலம்புரி உன்னுடைய தலைவரினது தேரிலே சத்திக்கின்றது. எ - று.

பாங்கி வலம்புரிகேட்டுத் தலைவனது வரவறிவுறுத்தல். (உஎ)

கணக்காகநாய்கடின்காயநிலையெனக்கண்ணியென்ன
கணக்காகநானலைந்தெய்த்தேனெழிற்செந்திற்கந்தநெற்
கணக்காகனார்தந்தநின்றனையேயினிக்காதலினாற் [றிக்
கணக்காகனுநிகர்த்தேயழியங்கத்தின்காதலற்றே.

இ - ள். கணக் காகம் நாய்கள் தின் காயம் நிலையெனக் கண்ணி - கூட்டமாகிய காகங்களும் நாய்களும் உண்கின்ற சரீரத்தை நித்தியமென்று நினைத்து,—என்ன கணக்கு ஆக நான் அலைந்து எய்த்தேன் - என்னதாற்பரியத்தின்பொருட்டு யான் அலைந்து இளைத்தேன்?—எழிற்செந்தில் கந்த - அழகையுடைய திருச்செந்தூரில் வீற்றிருக்குங் கந்தசுவாமீ!—நெற்றிக்கண் அக்கு ஆகனார் தந்த நின்றனையே - நெற்றிக்கண்ணையும் எலும்பு மணியைத் தரித்த திருமேனியையுமுடைய பரமசிவன் பெற்ற உம்மையே,—இனிக் காதலினால் கணக்கா - இனி விருப்பத்தினாலே தியானிக்கும்பொட்டு (இடையூறுவராமற்) காத்தருளும்;—கனா நிகர்த்து அழி அங்கத்தின்காதல் அற்று - சொப்பனத்தைப்போன்று அழிகின்ற சரீரத்தில் வைத்த விருப்பம் நீங்கி. எ - று.

கண்ண என்றது. கண என இடைக்குறைந்து நின்றது. சரீரத்தில் வைத்த விருப்பம் நீங்கி உம்மையே தியானிக்கும்பொருட்டுக் காத்தருளுமெனக் கூட்டுக. (உ௯)

காதலையானின்றனக்காக்கினனினிக்காயந்தந்தே
காதலையானின்றனக்காரணனடிக்கஞ்சங்களீங்
காதலையானின்றகங்கரைந்தேத்தரன்கண்ணியராக்
காதலையானின்றசங்கரன்சேய்செந்திற்காங்கெயனே.

இ - ள். காதலை யான் நின்றனக்கு ஆக்கினன் - விருப்பத்தை நான் உம்மேல் வைத்தேன்;—இனிக் காயம் தந்து காதல் - இனிச் சரீரத்தைப் படைத்துக் கொல்லாதொழியும்.—ஐயான் - சூக்குமரூபியும்,—இன் தனம் காரணன் - இனிமையாகிய அருட்செல்வத்துக்குக் காரணரும்,—அடிக்கஞ்சங்கள் நீங்காது அலையான் நின்று அகம் கரைந்து ஏத்து அரன் - தம்முடைய பாதமாகிய தாமரைமலர்களை நீங்காமல் திருப்பாற்கடலிலே நித்திரைசெய்யும் விஷ்ணுமூர்த்தி முன்னின்று மனம் உருகித் துதிக்கப்பெற்ற சங்காரகர்த்தாவும்,—கண்ணி அராக் காது அலையாநின்ற சங்கரன் சேய் - மாலையாகச் சர்ப்பம் காதுகளிலே அசைகின்ற சுகஞ்செய்பவருமாகிய பரமசிவனுடைய திருக்குமாரரே!—செந்தில் காங்கெயனே - திருச்செந்தூரிலிருக்கின்ற கங்காபுத்திரரே! எ - று.

சனனமரண துக்கங்களை நீக்கி நித்திய பேரின்பமயமாகியமோக்ஷத்தைத் தந்தருளும் என்பது கருத்து. [ஆகம்-மார்புமாம்.] (உக)

காயங்கலையநலியந்தகனணைகாலஞ்செய்ய
காயங்கலைபதளானிலநீரழல்காற்றெழிலா
காயங்கலையனலரிசித்தாயினன்காதலழ
காயங்கலைய திருஞ்செந்திலாயென்ககன்றனெஞ்சே.

இ - ள். காயம் கலைய நலி அந்தகன் அணை காலம் - சரீரம் நீங்கும்படி வருத்துகின்ற இயமன்வருங்காலத்திலே,—செய்ய காயம் கலை அதளான் - (சாக்கியநாயனாரெறிந்த) செங்கல்லாலாகிய சிவந்த தழும்பையும் கலைமானினது தோலையு முடையவராகியும்,—நிலம் நீர் அழல் காற்று எழில் ஆகாயம் கலையன் அலரி சித்து ஆயினன் - பிருதிவியும் அப்புவும் தேயுவும் வாயுவும் அழகையுடைய ஆகாசமும் சந்திரனும் சூரியனும் ஆன்மாவும் ஆனவராகியுமிருக்கின்ற பரமசிவனுடைய,—காதல் அழகு ஆய்-திருக்குமாரராகிய முருகக்கடவுளினது திரு வுருவத்தைத் தியானி;—அங்கு அலை அதிரும் செந்திலாய் என்க - அவ்விடத்தே சமுத்திரம் ஒலிக்கின்ற திருச்செந்தூரை யுடையவரே என்று சொல்லு;—கன்றல் நெஞ்சே - வருந்தாதொழி என் மனமே. எ - று.

என்மனமே இயமன்வருங் காலத்திலே வருந்தாதொழி முருகக்கடவுளினது திருவுருவத்தைத் தியானி திருச்செந்தூரையுடையவரே என்று சொல்லு எனக்கூட்டுக. [செய்யகாயம் - சிவந்த திருமேனியுமாம்]

சரீராந்தியத்திலே மனமானது எப்பொருளிலே சிந்தனை வைத்ததோ அப்பொருளை கைகூடும் என்பது சாத்திரசித்தம் ஆதலால், இப்படி உணர்த்தியருளினார். எக்காலத்திலும் இடைவிடாமல் வைத்த சிந்தனை எதுவோ அதுவே சரீராந்தியத்திலும் வருவது ஆகையால், முருகக்கடவுளைத் தியானித்தலை எக்காலத்திலும் இடைவிடாது செய்தாலொழியச் சரீராந்தியத்திலே செய்தல் கூடாது எனவும், அதனால் எப்பொழுதும் தியானிக்கவேண்டும் எனவும் அறிந்துகொள்க. (௩௦)

திருச்செந்தினி[illegible]யமகவந்தாதியுரை

முற்றுப்பெற்றது.

223174
COS